## காலநிலையிலிருந்து மீண்டெழுதல் மேம்பாட்டுச் செயற்திட்டம் - 2015.

காலநிலையிலிருந்து மீண்டெழுதல் மேம்பாட்டுச் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 யூலை 10 ஆந் திகதிய 5417-எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் 4:09(பீ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

காலநிலையிலிருந்து மீண்டெழுதல் மேம்பாட்டுச் செயற்திட்டத்தின் நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. காலநிலை ஆபத்திற்கு மக்கள் மற்றும் சொத்துக்கள் வெளிப்படுத்திய பாதிப்புக்களை குறைத்தல் மற்றும் இடர்களை திறம்பட எதிர்த்து செயலாற்றுவதற்கு பெறுநர்களின் இயலளவை மேம்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 14,617 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 111.8 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 14,382 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 110 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 ஆகஸ்ட் 05 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 மே 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமன பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது

அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(எ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஏ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஐ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | நிதியளித்தல் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 110.0 | 14,382 | 1,825 | 9.95 | 1,300 | 10.26 | 1,342 |
| இலங்கை அரசாங்கம் | 1.8 | 235 | 25 | 0.13 | 17 | 0.23 | 31 |
| | **111.8** | **14,617** | **1,850** | **10.08** | **1,317** | **10.49** | **1,373** |

நிதியளித்தல் உடன்படிக்கையின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட கடன் பெறுகைகளை பயன்படுத்துவதற்கும் செயற்திட்டக் காலப்பகுதியூடாக செயற்திட்ட நடவடிக்கைகளின் சீரான செயற்பாடுளிற்கு இயலுமானதாகவும் மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் போதுமானளவு ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டிருந்தது. ஆகையால், செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதியில் கடன் பெறுகைகளின் அதிகூடிய பயன்பாட்டிற்காக வருடாந்தம் சராசரியாக ரூபா 2,800 மில்லியன் ஒதுக்கீடுகள் வழங்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட போதிலும் மீளாய்வாண்டிற்காக ரூபா 1,825 மில்லியன் ஒதுக்கீடுகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,300 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டக் காலத்தின் பிற்பகுதியில் பயன்படுத்தப்படாத கடன் பெறுகைகளின் சேகரிப்பு சாத்தியங்கள் விரயங்கள் மற்றும் மோசடிகள் போன்றவற்றுக்கான சந்தர்ப்பங்களை அனுமதிக்கின்றதென இது சுட்டிக்காட்டியது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட நடவடிக்கைகள் பிரதானமாக அதிக காலநிலை பின்னடைவு பொருளாதாரத்தை ஸ்தாபிப்பதில் கவனம் செலுத்துவதுடன் தாழ்நில முதலீட்டுத் திட்டங்களின் அபிவிருத்தி, உட்கட்டமைப்புக் காலநிலைப் பின்னடைவின் அதிகரிப்பு, செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் ஆதரவு மற்றும் நிகழத்தக்க அவசர பதிலளிப்பு ஆகிய 04 பிரதான கூறுகளைக் கொண்டிருந்தது. பின்வரும் காரணங்களினால் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்த திகதியிலிருந்து 17 மாதங்கள் கடந்த பின்னரும் கூட 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் ஒவ்வொரு கூறுகளின் கீழ் அமுல்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் மீது மந்தமான செயன்முன்னேற்றம் அவதானிக்கப்பட்டிருந்தது.

(அ) செயற்திட்ட நடவடிக்கைகளின் சீரான செயற்பாடுகளிற்கான நிர்வாக மற்றும் கண்காணிப்பு பொறிமுறையொன்றை ஸ்தாபிப்பதற்கு இயலுமானதாக 2015 திசெம்பர் மாதத்திலும் கூட தனியான இடமொன்றில் செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவு அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவானது சமூகவியலாளர், சுற்றுச்சூழல் ஆய்வாளர் மற்றும் கொள்வனவு நிபுணர் மற்றும் துணைப் பதவியணியின் ஏனைய சில பதவிகள் ஆகிய பிரதான பதவிகளிற்குப் பொருத்தமான நிபுணர்களின் பற்றாக்குறையுடன் செயற்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் பிரதான நடவடிக்கையாக உள்ள 10 தாழ்நிலங்களிற்கான முதலீட்டுத் திட்டங்களின் தயாரிப்பு மற்றும் அபிவிருத்திக்கான மதியுரைஞர்களிற்காக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் கூட ஒப்பந்தங்களை வழங்குவதற்கு நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2015 செப்தெம்பர் மாதத்தில் உரிய அதிகாரசபைகளிற்கு வேண்டுகோள்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் கூட காற்று அளவை நோக்கங்கள் மீது திருப்திகரமான செயன்முன்னேற்றம் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு மதியுரைஞர் பதவியணியின் பற்றாக்குறையுடன் செயற்படுகின்றமையால் மண்சரிவு இடர்களிற்கு பாதிப்படைகின்ற கண்டி மாவட்டத்தின் 18 பாடசாலைகளில், 13 பாடசாலைகளில் சரிவுத்தள உறுதிப்படுத்தல்

வேலைகளிற்கான ஒப்பந்தங்களை வழங்குதல் மீதான செயன்முன்னேற்றம் மந்தமாக இருந்தது. தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு ஒப்பந்த அடிப்படையில் மதியுரைஞர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் இது சரிவுத்தள உறுதிப்படுத்தல் வேலைகள் மீது ஒப்பந்தகாரர்களைப் போன்று மதியுரைஞர்களினது குறைவான அனுபவங்கள் காரணமாக குறுகிய காலத்தில் செயற்திட்டத்திற்கு மதியுரை சேவைகளை விரைவுபடுத்த முடியாதிருந்தது.

(ஈ) மண்சரிவுகளைத் தடுப்பதற்கும் தொடர்ச்சியான போக்குவரத்தை உறுதிப்படுத்துவதற்கும் 09 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் பாலங்களை புனரமைப்பதிலும் 17 பொதிகளின் கீழ் வீதி ஓரங்களிலுள்ள சரிவுத்தளங்களின் உறுதிப்படுத்தலிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஈடுபட்டிருந்தது. 03 பொதிகளின் கீழ் மீளாய்வாண்டின் போது பாலப் புனரமைப்பு வேலைகளிற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில், நெடிமல – பொறலெஸ்கமுவ வீதியின் பாலப் புனரமைப்பு வேலைகளின் செயன்முன்னேற்றம் தொலைபேசிகள் மற்றும் தண்ணீர் இணைப்புக்கள் போன்ற பயன்பாட்டு சேவைகளை நகர்த்துவதிலுள்ள காலதாமதங்கள் காரணமாக இலக்குகள் பின்னோக்கியிருந்தன. மேலும், வீதி ஓரங்களில் சரிவுத் தளங்களின் உறுதிப்படுத்தல் மீது வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்குமான அறிவுத்திறன் நிபுணர்களின் பற்றாக்குறை காரணமாக கண்டி – மஹியங்கணை வீதியின் வீதி ஓரங்களிலுள்ள சரிவுத்தள உறுதிப்படுத்தல்களிற்காக வழங்கப்பட்டிருந்த 03 ஒப்பந்த பொதிகள் மந்தமான செயன்முன்னேற்றத்தை காட்டியிருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

கிழக்கு, வடமத்திய, வடமேல், தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களில் நீர்ப்பாசனத் திணைக்களம் பல வெள்ளம் மற்றும் வறட்சி தணிப்பு செயற்திட்டங்களை அமுல்படுத்தியிருந்தது. தென் மாகாணத்திலுள்ள திஸ்ஸமஹாராமயவில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மாகாண பொறியியல் அலுவலகத்தால் அமுல்படுத்தப்பட்ட தணிப்பு நடவடிக்கைகள் மீது கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்தள விஜயங்களில் யோத வெவ மற்றும் திஸ்ஸ வெவ தணிப்பு செயற்திட்டத்தின் கீழ் செயற்திட்டத்தால் நிர்மாணிக்கப்பட்ட விநியோகக் கால்வாய்களின் கரைச் சுவர்களில் நீர்க் கசிவுகள் அவதானிக்கப்பட்டிருந்தன. நீர்ப்பாசனத் திணைக்களத்தால் நிறைவேற்றப்பட்ட வேலைகளின் தரத்தினையும் நிலைத்திருத்தல் தன்மையையும் உறுதிப்படுத்துவதற்கு வேலைகளின் மேற்பார்வை நடவடிக்கைகள் போதியளவில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதற்கான சான்றினை இது வழங்கியது. மேலும் மீளாய்வாண்டின் போது வீரகெற்றியாவில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மாகாண பொறியியல் அலுவலகத்தால் அவ் 35 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 25 தணிப்புச் செயற்திட்டங்களிற்காக வேலைகளின் வடிவமைப்புக்களும் கிரய மதிப்பீடும் மாத்திரமே தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 09 தணிப்பு செயற்திட்டங்களின் கீழ் நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன என அவதானிக்கப்பட்டிருந்தது.

**3.4 நிதிக் கட்டுப்பாடுகள் மீதான சர்ச்சைகள்**

பணிப்பாளரொருவர் மற்றும் செயற்திட்டப் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கணக்காளரொருவர், இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் 03 ஏனைய மூத்த கணக்காய்வு அலுவலர்கள் ஆகியோரைக் கொண்டுள்ள உள்ளக கணக்காய்வுக் குழுவினால் செயற்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படுகின்றன. உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த அவதானிப்புக்களின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகள் மீது பொருண்மையான கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளக்கூடிய வகையில் விபரமான புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என இது வெளிப்படுத்தியிருந்தது. மேலும், மேற்குறிப்பிடப்பட்ட அலுவலர்களில் சிலர் செயற்திட்ட நடவடிக்கைகளின் அமுல்படுத்தல் தொடர்பாக முகாமைத்துவ தீர்மானங்களை மேற்கொள்ளும் செய்முறைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் செயற்திட்ட செயற்பாடுகள் மீது சுயாதீன மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால், உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நிதிப் பிரமாணம் 134(3) இன் மூலம் வேண்டப்பட்டவாறு போதுமானதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.